Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol 42 — No. 10

ACC-NO - 34341

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 42 | சௌமிய ஐப்பசி 1969 அக்டோபர் | இதழ் 10

உள்ளுறை

உள்ளுறை	பக்கம்
தணிகைமணியும் டாக்டர் பட்டமும்	297
காந்தியடிகளின் நூற்றாண்டு விழா	301
அறங்காத்த அம்மையார்	305
மானுட யாக்கை	309
அவையடக்கமும் ஆன்றோர் தமிழும்	213
தேனன்ன தண்ணீர்	318
அரசனின் அருள் மொழி	322
..திப்புரை	328

இதழாசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ.,
துணையிதழாசிரியர் : வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செயற்குழுக் கூட்ட அறிவிப்பு

சென்னை மயிலாப்பூர் குமாரகுருநாத முதலி தெரு சமாச அலுவலகத்தில் 26—10—69 ஞாயிறு காலை 9-30 மணிக்குச் சமாஜச் செயற்குழுக் கூட்டம் நிகழும். அவ்வமயம் வரவு செலவுக் கணக்கு, ஆண்டுவிழா முதலியன பற்றி ஆலோசிக்கப்பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவறாது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர்.

நம் சமாஜ ஆயுள் உறுப்பினராக திரு. அ. மாரிமுத்து அவர்கள் (ஆசிரியர்; 3/68 அ. கிழமேல் தெரு, செங்குந்த புரம், புன்செய்ப்புளிபம்பட்டி அஞ்சல், கோவை மாவட்டம்) சேர்ந்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புன்செய்ப்புளியம்பட்டியைச் சைவப் பயிர் தழைத் தோங்கவல்ல நன்செய்ப்புளியம்பட்டியாக ஆக்கும் சமாஜ அன்பர்கள் யாவருக்கும சிறப்பாகத் திங்கள்தோறும் ஆயுள் உறுப்பினர் ஒருவரைச் சேர்த்துதவும் சமாஜப் பேரன்பர் திரு. ரா. ஆறுமுகம் அவர்களுக்கும் சமாஜம் தம் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்வதுடன் நன்றியும் செலுத்துகிறது.

நம் சைவ சித்தாந்த மகா சமாஜ 64 ஆம் ஆண்டு விழா தொண்டை நாட்டின் தலைநகராய கச்சியம்பதியில் நிகழும். தலைவர்கள், தேதி முதலிய பிறவிவரங்கள் அடுத்த இதழில் வெளியிடப்பெறும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஐப்பசித்திங்கள் சிறப்பு நாள்கள்.

3	(19-10-69)	கலைமகள் விழா
9	(25-10-69)	அசுவனி—திருமூலநாயனர் விழா
10	(26-10-69)	பரணி—நின்றசீர் நெடுமாற நாயனர்
11	(27-10-69)	கார்த்திகை—இடங்கழி நாயனர் விழா
17	(2-11-69)	பூசம்—சத்திநாயனர் விழா
23	(8-11-69)	தீபாவளி விழா
24	(9-11-69)	சுவாதி-மெய்கண்டதேவ நாயனர் விழா
26	(11-11-69)	அனுடம்—பூசலார் நாயனர் விழா
28	(13-11-69)	மூலம்—ஐயடிகள் காடவர்கோன் நாயனர் விழா.

Reg. M. 2330

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணிலையுள் நாடு.

மலர் 42	சௌமிய ஞு ஐப்பசி 1969 அக்டோபர்	இதழ் 10

வ, சு. செங்கல்வராயப் பிள்ளையவர்களுக்குக் கௌரவ டாக்டர் பட்டம்

ஆசிரியர்.

திருப்புகழ் படிப்பவர்களும், தேவாரம் ஆராய்பவர்களும், தல யாத்திரை செய்பவர்களும், பிள்ளையவர்களை நன்கு அறிவார்கள். தம் தந்தையார் வடக்குப் பட்டு சுப்பிரமணியப் பிள்ளை பதிப்பித்த மூன்று பாகங்கொண்ட திருப்புகழ்த் தொகுதியையும், பிற அருணகிரிநாதர் பாடல்களையும், ஏனையோர் பாடிய முருகன் தோத்திரப் பாடல்களையும் பதினொரு திருமுறைகளாக இவர்கள் வகுத்து அமைத்திருப்பதை நன்கு அறிவார்கள். அப்படியே, தேவார ஆராய்ச்சியாளருக்கு இவர்கள் தொகுத்திருக்கிற பொருட் கருவூலமாகிய தேவார ஒளிநெறி என்பது ஒரு சிறந்த ஆராய்ச்சித் துணைவன் ஆகும். சிவஸ்தல மஞ்சரியானது தலயாத்திரை செய்கிற சைவ மக்கள் அனைவருக்கும் இன்றுவரை சிறந்த வழிகாட்டியாக இருந்து வருகிறது.

பிள்ளையவர்களுக்கு மதுரைச் சர்வகலாசாலையார் கௌரவ இலக்கியத்துறை டாக்டர் பட்டம் 1-9-69 இல் அளித்தார்கள். நம் நாட்டுப் பல்கலைக் கழகங்களில் மதுரைப்

பல்கலைக் கழகம் இளமை பொருந்தியது. அது தோன்றி நான்கு ஆண்டுகளே ஆகின்றன. முதன் முதலாக நம் பிள்ளையவர்களுக்குக் கௌரவப் பட்டம் அளித்திருப்பது பல்கலைக் கழகத்துக்கே பெருமை தரும் செய்தி. தமிழ் நாட்டில் உழைப்பினாலும், தமிழ்த் தொண்டினாலும், அடக்கத்தினாலும், கடவுள் பக்தியினாலும் இவர்களை விடச் சிறந்தவர் வேறு எவரும் இலர். ஆதலால் இத்தகையவரைத் தெரிந்து போற்றுவது சர்வகலாசாலைக்குப் பெருமை தருவது என்பதில் ஐயமில்லை.

பிள்ளையவர்களுக்கு இப்பொழுது 87 வயது ஆகிறது. இவர்களுக்கு எண்பதாண்டு 15–8–63-இல் பூர்த்தியாயிற்று. 1963 செப்டம்பர் சித்தாந்தம் இதழில் இவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைக் குறிப்பிட்டு, சமாஜத்தின் வாழ்த்தையும் தெரிவித்திருந்தோம். இவர்கள் இவ்வளவு காலம் நம்மோடு இருந்து, தேவார ஒளி நெறிக்குப் பிறகு, திருவாசக–திருக்கோவை ஒளி நெறிகள் முடித்து, ஒன்பதாம் திருமுறை ஒளிநெறி இன்று எழுதி வருவது சைவமும் தமிழும் செய்த புண்ணியமாகும்.

சைவ மக்கள், பிள்ளையவர்களுக்கு மதுரைப் பல்கலைக் கழகத்தார் பட்டம் கொடுத்த செய்தியைப் பத்திரிகை வாயிலாக அறிவார்களே தவிர, இவர்கள் உடல்நிலை எவ்வாறு இருந்து வந்தது. இருந்து வருகிறது என்பதை அறியமாட்டார்கள். இது பற்றிய ஓர் உண்மையைக் கூறுவதே இக் குறிப்பின் நோக்கம்.

சென்ற ஒரு வருட காலமாக இவர்களுக்குப் பட்டம் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடந்து வந்தன. இது வெளியே ஒருவருக்கும் தெரியாது; இவர்களுக்கும் தெரியாது. அந்த நிலையில் ஒரு சமயம் (9-1-69) அன்று இவர்களை யாம் பார்க்கப் போயிருந்தோம். பார்த்த நேரம் இரவு 9–30 மணி. இவர்கள் மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்தார்கள். உடம்பு என்று ஒன்றும் அங்கு இல்லை. எலும்பை மூடிய தோலாகக் காட்சியளித்தார். பல நாள்களாக உணவில்லை; ஆதலால் மெலிவு, வாய் பேசமுடியவில்லை; குரல் நரம்புகள் ஒடுங்கியிருந்தன: ஆகவே பேச்சு சாத்தியமில்லை. கண் பார்வை மந்தம். காது மந்தம், முழங்கால் பெரிதும் வீக்கம்–யாம் சென்று பார்த்தபோது முழங்காலைக் காட்டி, வேதனை தாங்க முடியவில்லை என்று கூடக் குறிப்பால் சொன்னார்கள்.

கைகள் பெரிதும் நடுக்கம். பல ஆண்டுகளுக்கு முன்னே இவர்கள் ஹெர்ணியா ஆப்பரேஷன் செய்துகொண்டிருந்த இடத்தில் மீண்டும் உபத்திரவம். வயது அப்போது 86 நடந்து கொண்டிருந்தது. ஒரு மனிதனுக்கு உடல் நோய்கள் என்று சொல்வதற்கு இவற்றைவிட வேறு என்ன உள்ளன? உயிர் அகத்ததோ, புறத்ததோ என்று ஐயுறும்படியாக இருந்தது. டாக்டரே, 'என்ன வைத்தியம் செய்வது' என்று துணிய முடியாது கலங்கி விட்டாராம். இந்த நிலையில் இவர்களை நாம் பார்த்தோம். சமாஜத் திருவாசகப் பதிப்புப் புத்தகம் ஒன்றைக் கொடுப்பதற்காக அப்போது சென்றோம். இவர் கைகள் புத்தகத்தை ஏந்தும் வலிமை யில்லாதன என்று யாம் கருதி, அருகிலிருந்த இவர் மனைவியாரிடம் அதனை அளித்தோம். "என்ன?" என்று கேட்டார்கள். "சமாஜ வெளியீடாகிய புதிய திருவாசகப் பதிப்பு" என்று யாம் சொல்ல, இவர்கள் அதைக் கொடுக்கச் செய்து, வாங்கித் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார்கள். அதைவிட உருக்கமான ஒரு காட்சியை ஒருவர் காண முடியாது.

அப்புறம் மனைவியை அழைத்து இவர்கள் ஏதோ சொல்லும் குறிப்பறிந்து, அவர்கள் அப்பர் தேவாரம் கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்கள். இவர்கள் மீண்டும் ஏதோ சொல்ல முயன்றபோது மனைவியார் அதை உணர்ந்து என்னிடம் ஒரு கற்பலகையையும், இவர்களிடம் ஒரு சாக்கட்டியையும் கொடுத்தார்கள். வாய் பேசமுடியாமையால் யாம் கற்பலகையைப் பிடித்துக்கொள்ள, இவர்கள் எழுதினார்கள்; இவர்கள் எழுத முயன்றார்கள் என்பதே சரி. கண்ணும் தெரியாமல், கைகளும் ஆட்டமாக இருந்தபடியால், எழுத்துக்கள் சரியாக அமையவில்லை. யாம் புரிந்துகொள்ளாமையை உணர்ந்த இவர்கள் மனைவியார், "நாயினும் கடைப்பட்டேனை என்னும் தேவாரத்தைப் படிக்கச் சொல்லுகிறார்கள்" என்று சொன்னார்கள். யாம் அந்தத் திருநேரிசைப் பாடலைப் படித்தோம்:

> நாயினும் கடைப்பட்டேனை நன்னெறி காட்டி ஆண்டாய்
> ஆயிரம் அரவமார்த்த அமுதனே அமுதமொத்த
> நீயுமென் நெஞ்சினுள்ளே நிலாவினாய் நிலாவி நிற்க
> நோயவை சாருமாகில் நோக்கி நீ அருள் செயாயே.

இப்பாடல் இவர்களுடைய அன்றைய நிலைமையையும் உள்ளத்தையும் படம் பிடித்துக் காட்டுவதுபோல அமைந்திருந்

தது. உடலை யொட்டிய கருவி கரணங்களெல்லாம் பூரண மாய்த் தளர்ந்து போன போதிலும் கூட மனமும் புத்தியும் மட்டும் தெளிவாக இருந்தது. இப்பாடலைச்சுட்டிக்காட்டியது எமக்குப் பெரு வியப்பாய் இருந்தது.

அப்போது இவர்களுடைய மனைவியார் "இச்சமயம் திருக்கோவையார் ஒளி நெறியில் இன்னும் ஒரு பக்கம்தான் பாக்கியிருக்கிறது. அதை முடிப்பதற்குள் இப்படி நோய்ப்பட்டார்களே" என்று வருந்திக் கூறி, மேலும் சொன்னார்கள்; திருக்கோவையார் முடிக்கிற அன்றே கால இடையீடில்லாமல் அடுத்ததாகிய ஒன்பதாம் திருமுறை ஒளிநெறி மேற்கொள்ள வேண்டும் என்றும், ஒரு பொழுதுகூட திருமுறைக்காகச் செலவிடாமல் வீண்போகக் கூடாது என்றும் சொன்னார்கள்" என்று கூறினார்கள். இதைக் கேட்டபோது, "பெரு வேலையைத் தொடங்கினவர்களுக்கு வேலை முடிகிற வரையில் ஆண்டவன் ஆயுளை நீடிக்கச் செய்கிறான் என்று ஒரு வசனம் சொல்வார்கள். அதுபோல இப்படி அவர்கள் ஆயுளை நீடித்துக் கொள்வதற்காக வேலையைப் பெருக்கிக் கொள்கிறார்கள் போலும்" என்று, யாம் விளையாட்டாகக் கூறக் கேட்டு இவர்கள் சிரித்தார்கள். உடலில் எந்த உணர்ச்சியும் வர இயலாத நிலையில் இவர்கள் இருந்தார்கள். எனினும், இந்தச் சிரிப்பானது புலன்கள் ஒடுங்கியும், மனம் மட்டும் தெளிவாக வேலை செய்தது என்பதைத் திட்டமாய்க் காட்டியது.

பிறகு இவர்களுக்கு நமஸ்காரம் செய்து விடை பெற்றுக் கொண்டு யாம் திரும்பினோம். மறுநாள் அவர்களுக்கு டெலிபோன் செய்யவோ, கடிதம் எழுதி உடல் நிலை அறியவோ எமக்கு மனத்தைரியமில்லை; காரணம் அன்று பார்த்தபோது அவர்களுக்கு இருந்த உடலின் நிலை. பின்னர் அவர்கள் சில நாள் ஒரு மருத்துவ மனையில் தங்கிப் பின் இல்லம் திரும்பிச் சுகமானார்கள்,

தணிகைநாதனிடம் அவர்களுக்கு இருந்த ஈடுபாட்டைக் கண்டு அவர்களுக்குத் தணிகை மணி என்றொரு பட்டம் பெரியோர்கள் கொடுத்திருந்தார்கள். உண்மையில் அவர்கள் அந்த நிலையிலிருந்து பிழைத்தெழுந்தது. தணிகைநாதனுடைய அருளென்றே அறிந்தவர்கள் சொல்வார்கள். கடவுள் இல்லையென்று சாதிப்பவர்கள் கூட, அவர்கள் அன்று இருந்த நிலையைக் கண்ணால் கண்டிருந்தால், உண்மையில் அவர்கள் பிழைத்தெழுந்தது மனித சக்தியால் அன்று, இதைக் கடந்த

ஒரு தெய்வ சக்தியால்தான் என்பதை நன்கு உணர்ந்து கடவுளிடம் நம்பிக்கை கொள்வார்கள். கடவுள் செய்யும் அற்புதம் (Miracle) என்று பேசுகிறோம். இது ஒரு பேரற்புதம் என்று மட்டும் கூறி இப்போது அமைகிறோம்.

இப்படியிருந்தவர்கள், பிழைத்தெழுந்து, மதுரைக்கு நேரில் சென்று, ஏற்பாடு செய்திருந்த விசேஷப் பட்டமளிப்பு விழாவில் பங்கு கொண்டு, கௌரவ டாக்டர் பட்டம் நேரில் பெற்றார்களென்றால், ஆண்டவன் சித்தம் அவ்வாறிருந்தது என்பதையே காண்கிறோம். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் ஆங்காங்கு இறைவனது பெரும் கருணை வெளிபபடுகிறது. அவன் அருளின் வண்ணமும் மாண்பும் அளவில்லை; யாரே இதை அளவிட்டுச் சொல்ல முடியும்!

பிள்ளையவர்களுக்குப் பட்டமளித்த மதுரைப் பல்கலைக் கழகத்தையும், அதன் துணைவேந்தர் திரு. தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களையும் தமிழ் மக்கள் சார்பிலும், சைவ மக்கள் சார்பிலும் வாழ்த்துகிறோம். பிள்ளையவர்களையும் மேலும் பல்லாண்டு வாழ்ந்து பன்னிரு திருமுறைகளுக்கும் பொருளகராதியாகிய ஒளி நெறி எழுதி முடிக்கவேண்டுமென்று வாழ்த்துவதோடு, இதை அவர்கள் செய்து முடிக்கவும், இதற்கான ஆரோக்கியத்தோடு வாழவும் கருணை பாலிக்கும்படி இறைவனையும் வேண்டுகிறோம்.

காந்தியடிகளின் நூற்றாண்டு விழா

மு. அ.

மகாத்மா காந்தியின் பிறந்த நாள் 2-10-1869. இந்த நாளின் நூற்றாண்டு விழா 2-10-1969 அன்று இந்திய நாட்டில் மட்டுமல்லாமல், உலகெங்கும் கொண்டாடப்படுகின்றது. உலகத்துக்கே விரிந்த அளவில் அன்பு மார்க்கத்தை உபதேசித்த பெரியார் மூவர். இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் இந்த மண்ணில் தோன்றிய புத்தர் பெருமான் உலகத்தில் துன்பம் எப்படி உண்டாகிறது என்பதை ஆராய்ந்து, அதை நீக்குவதற்காகவே தம் அரச போகத்தையும் துறந்து, அன்பு ஒன்றே துக்க நிவாரண மார்க்கம் எனத் துணிந்து, அதைப் பரப்பத் தம் ஆயுளைச் செலவிட்டார். அவருக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்குப் பின் தோன்றிய

இயேசு கிறிஸ்து, பகைவனுக்கும் அருளவேண்டும் என்ற அறநெறியை உலகத்தாருக்கு உபதேசம் செய்தார். மூன்றுவது பெரியார் மகாத்மா காந்தி. இவர் அன்பு, சத்தியம் என்ற இரு தத்துவங்களையும் கடைப்பிடித்துப் பெருங்காரியங்களைச் சாதித்தார். இலட்சக் கணக்கான மக்கள் ஆடவரும் பெண்டிரும், கற்றோரும் கல்லாதவரும், செல்வரும் பரம ஏழையும், அதே தத்துவங்களைக் கடைப்பிடிக்கச் செய்தார். அப்படிச் செய்து, அறவே கடைப்பட்டோருக்கும் நன்னெறி காட்டி முன்னேற்றினர். அஞ்சாமல் எந்தக் கொடுமையையும் மனஞ் சலிக்காமல் தைரியத்தோடு எதிர்த்து நிற்கும் மன வலிமையைத் தந்தார். இது சரித்திரம் காணாத ஒரு சாதனை. இந்த வலிமையைக் கண்டு பகைவரே அஞ்சும்படி இருந்தது. இந்தத் தலைமுறையில் சரித்திரம் கண்ட வல்லரசாகிய இங்கிலாந்தையும் பின்வாங்கச் செய்தது.

மகாத்மா காந்தி, காந்திஜி என்றெல்லாம் வழங்கிய பெயரை, தமிழ் மரபுக்கு ஏற்ற முறையில் காந்தியடிகள் என்று வழங்கச் செய்த பெருமை திரு வி. கலியாணசுந்தர முதலியாருக்கு உரியது.

உறங்கிக் கிடந்த இந்திய நாட்டுக்கும், இந்திய மனித கோடிகளுக்கும் அவர் ஒரு புதிய தைரியத்தையும், உள்ளத்தில் எழுச்சியையும் ஊட்டினர். சுய மரியாதை என்ற சொல் இப்பொழுது அர்த்தமற்றதாகி விட்டது. ஆனல் இந்த நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவனும் நான் இந்தியன் என்று சொல்லிக் கொள்ளும் சிறந்த சுயமரியாதை உணர்வை அவரே ஊட்டினர். அடிமைப் பட்டிருந்த மக்களுக்குச் சுதந்திரத்துக்கான ஒரு திட்டத்தையும் அவர் வகுத்துக் கொடுத்தார்; போருக்கான ஒரு கருவியையும் செய்து கொடுத்தார். அக்கருவியே சாத்விகச் சட்ட மறுப்பு, ஒத்துழையாமை என்ற பெயர்களால் வழங்குவது.

தீமையைக் கண்டவிடத்து அவர் அன்போடு எதிர்த்தார். வெறுப்பில்லாமல் அன்போடு செய்கின்ற போரின் பலன் நிரந்தரமான நன்மை என்பதை அவர் நிரூபித்தார். இதை இன்று கண்கூடாகப் பார்க்கிறோம். பிரிட்டிஷார் தாங்கள் அடிமைப்படுத்தி வைத்திருந்த இந்தியாவைத் தாங்களாகவே விட்டு விட்டு வெளியேறி விட்டார்கள். இந்தியா நடத்திய சுதந்திரப் போரில் இந்தியாவுக்குத்தான் வெற்றி, ஆனல் இங்கு வென்றவரும் தோற்றவரும் அன்போடு பழகுகி

ஞர்கள். இதுவே காந்தியத்தின் சிறப்பு. தோற்றவருக்குத் தாழ்வில்லை. அன்போடு இருவரும் பிரிகிறார்கள்.

அன்பும் சத்தியமும் கலந்த போர்த் திட்டத்திற்குச் சத்தியாக்கிரகம் என்ற பெயர் வைத்திருந்தார். இதன் பொருளாவது சத்தியத்தை வலிமையாகக் கடைப்பிடித்து ஒழுகுதல், சத்தியத்தை அன்போடு கடைப்பிடிக்கும் இந்தச் சீல நிலை சைவர்களாகிய நமக்கு நிரம்பத் தொடர்புடையது.

சில தொடர்புகளை மட்டும் குறிப்பிடுவோம். அடிக்கடி அன்பும் சத்தியமும் ஒரு காசின் இரு பக்கங்கள் போல என்று அவர் சொல்வார். சத்தியமே கடவுள் என்று அவர் சொல்லி வந்தார். அவருக்கு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்பு திருமந்திர ஆசிரியராகிய திருமூலர் 'அன்பே சிவம்' என்று கூறினர். இதை மகாத்மா அறிந்திருந்தால் எவ்வளவோ மகிழ்ந்திருப்பார். அன்பு சத்தியம் இரண்டுக்கும் எந்த வேறுபாடும் இல்லை.

காந்தியடிகள் ஒரு சமயம் சிதம்பரத்தில் பேசும்போது பின்வருமாறு சொன்னர். "தாழ்ந்த குலத்தில் பிறந்த நந்தனர் தம்முடைய பணிவினாலும், அடக்கத்தினாலும், தியாகத்தினாலும், உண்மையான பக்தியினாலும் தம் எஜமானருடைய மனத்தை மாற்றி, அனுமதி பெற்றுக்கொண்டு ஆலயம் சென்று சுவாமி தரிசனம் செய்தார். இவரல்லவா உண்மையாண சத்தியாக்கிரகி. இவரே முதல் சத்தியாக்கிரகி. சிதம்பரம் மண்ணில் நான் நின்று பேசுகபொழுது இந்த நினைவுகள் என் மனத்தில் எழுகின்றன" என்று அவர் பேசியிருக்கிறார். இதைப் பார்க்கும்போது, நந்தனருடைய சரித்திர உண்மையை நம்மைவிட நுட்பமாகக் காந்தியடிகள் உணர்ந்திருக்கிறார் என்று சொல்வது மிகையாகாது.

அப்பர் சுவாமிகள் சரித்திரத்தில் ஒரு செய்தியைப் பார்க்கிறோம். பழையாறையில் இருந்த சிவாலயத்தைச் சமணர் மண்ணால் மூடி வைததிருந்த செய்தியறிந்து நொந்து, இறைவனுடைய தரிசனம் கிடைக்க வேண்டும் என்று அபபர் உபவாசம் இருந்தார். இறைவனல் உணர்த்தப்பெற்ற அரசன் கோயிலை வெளிப்படுத்தி, அப்பர் சுவாமிகள் தரிசிக்குமாறு செய்தான். இதுவும் ஒரு சத்தியாக்கிரகமேயாகும்.

காந்தியடிகளின் வாழ்க்கை ஒரு விதத்தில் மெய்ப் பொருள் நாயனுர் வாழ்க்கையை ஒத்தது. நாயனுர் திரு நீற்றினிடம் கொண்ட பக்தி மிகுதியால் பகைவன், உருமாறி திருநீறு பூசிக்கொண்டு வந்து கொன்ற நேரத்தும், அவனுக்கு எந்தத் தீங்கும் நேரக்கூடாது என்று எண்ணி, தம் நாட்டு எல்லைக்கு அப்பால் அவனைக் கொண்டுபோய் விட்டு வரு மாறு செய்து, அவ்வாறு விட்ட பிறகு தம் உயிரை விட்டார் என்று புராணம் சொல்லுகிறது. காந்தியடிகள் தம்மைப் பகைவன் சுட்டபோதும் கூட 'ஹே ராம்' என்று தெய்வத்தின் பெயரைச் சொல்லி உயிர் விட்டார் என்று அறிகிரும். இரு வரிடத்திலும் கண்ட பக்தியானது திரிகரண சுத்தியாக விளைந்த பக்தியாகும்.

இவ்வாருகச், சைவத்துக்கும் காந்திய நெறிக்கும் நிரம்பிய ஒற்றுமைகள் இருக்கின்றன. காந்தி நாயனுர் என்று சொல் வது எல்லா விதத்திலும் பொருத்தமாக இருக்கும்.

இவ்வாறு காந்தி இந்தியாவில் பண்டைய நீதி ஒழுக்கத் துக்கு நிலைக்களமாக விளங்கி நின்ருர். இந்த நாட்டுக்கு அவர் சேவை செய்யாத துறை இல்லை. மக்கள் நெஞ்சில் தைரியத்தை வளர்ந்தார். உடையிலும், உணவிலும், வாழ்க் கையிலும் எளிமைக்கு ஏற்றம் கொடுத்தார். மிக்க முரடர் களான எல்லைப்புற மக்களைச் சாந்தமுடையவர்களாக ஆக்கி ஞர். 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற திரு மந்தி ரத்தைத் தாம் கடைப்பிடித்து வாழ்ந்ததுமின்றி, மிகப்பல வான மக்களும் கடைப்பிடிக்கச் செய்து வாழ்ந்தார். பெண் களை மங்கையர்க்கரசி போலவும், ஜான்சிராணி போலவும் வீர முள்ளவர்களாக ஆக்கிஞர். தொழிலாளர்களுக்கு வாழ்வும், உரிமையும் வழங்கினுர், சுதேச மன்னர்களை நண்பர்களாக்கி ஏழைகள் படும்பாட்டைக் கண்திறந்து பார்க்கச் செய்தார். கடவுள் பெயரே பெரும் மந்திரம் மருந்து என்று தாம் அனுட் டித்துக் காட்டி எளிமையான வாழ்க்கை முறைகளையும் நோய் சிகிச்சை முறைகளையும் தாம் அறிமுகப் படுத்திக் காட் டினுர். குழந்தைகளின் மனப்போக்கை ஒட்டி, உழைப்பின் மூலமும் தாய்மொழி மூலமும் கல்வி புகட்டுவதற்கான திட் டங்களை வகுத்துத் தந்தார். கிராமங்களின் வளர்ச்சியே நாட்டின் முன்னேற்றம், கிராமக் கைத்தொழில்களின் வளர்ச் சியே மக்களுக்கு நலம் தரும், இயந்திர மோகம் நாட்டைப் படுகுழியில் ஆழ்த்தும் என்று ஆணித்தரமாக வற்புறுத்தினுர். உழைப்பே செல்வம், உழைப்பே தெய்வம் என்று நடந்து

காட்டினார். பேச்சைக் குறைத்துச் செயலைப் பெருக்குக என்று உபதேசித்தார். ஏழைக் குழந்தைகளின் நன்மைக்காக அவர் மேற்கொண்ட பசுப் பாதுகாப்புத் திட்டங்கள் பல. அவருடைய முயற்சியில்லா விட்டால், தாழ்த்தப்பட்ட மக்கள் இவ்வளவு விரைவில் முன்னேறியிருக்க முடியாது.

இங்ஙனமாக நாட்டின் மேம்பாட்டிற்காக அவர் தொடாத துறை இல்லை, தொட்டு மேம்படுத்தாததும் இல்லை என்று சுருக்கமாகச் சொல்ல வேண்டும்.

ஆனால் அந்தோ! நாட்டுத் தலைவர்களுடைய சுயநல உணர்ச்சி காரணமாக, நாடு அவருடைய திட்டங்களைக் கைவிட்டு இன்று வேறு திசையில் போய்க்கொண்டிருக்கிறது. காந்தி பெயரால் ஆர்ப்பாட்டங்கள் நடக்கின்றனவேயன்றி, அமைதியும் ஒற்றுமையும், ஒழுக்கமும், உழைப்பும் ஓங்க வில்லை. இது நம்முடைய துர்ப்பாக்கியம்.

காந்தியடிகளின் வாழ்க்கையில் அவரை முழுமையும் ஆட்கொண்டு செலுத்திய பெரும் தத்துவம் தெய்வ நம்பிக்கை, தெய்வ வழிபாடு என்பது. இது சைவர்களுக்கு இன்றும் என்றும் உடன்பாடான தத்துவமே யாகும். இந்த தத்துவம் வளரவேண்டும்; காந்தி நாமம் உலகில் முழங்க வேண்டும் என்று நாம் பரம்பொருளை வேண்டுவோமாக.

அறங்காத்த அம்மையார்

வித்துவான், குமரேசப்பிள்ளை, நாகர்கோவில்

"மங்கைய ராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா—இந்தப்
பங்கயக் கைந்நலம் பார்த்தலவோ இந்தப
பாரில் அறங்கள் வளரு மம்மா

என்றார் கவிமணி. அறம் வளரத் துணை செய்கின்றவர்கள் மங்கையர்கள். ஆகவே மங்கையர் பிறவி மாதவம் செய்து வந்த பிறவி என்பது கவிமணியின் கருத்து.

அறம் இரண்டு. ஒன்று இல்லறம்; மற்றது துறவறம். வீடு பேற்றைத் தருகின்ற துறவறத்துக்கு மக்களைப் பண்படுத்துவது

இல்லறமே. ஆகவேதான் வள்ளுவரும் இல்லறத்தைக் கூறிப் பின் துறவறத்தைக் கூறினார். இல்லறத்தை ஒருவன் நல்லறமாக நடத்தினால் வீடு பேறு என்னும் பேரின்ப நிலையைப் பெற துறவறம் வேண்டா என்பதனை வள்ளுவர்,

> அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றின்
> போஒய்ப் பெறுவ தெவன்

எனும் குறட்பாவால் வலியுறுத்துகின்றார்.

இல்லறம் என்பது இல்லத்தில் இல்லாளுடன் செய்வதாகிய மனையறம். இல்லாளின்றேல் இல்லறமில்லை. மனையாளின்றேல் மனையறமில்லை. இல்லாள் என்றால் இல்லுக்குரியவள் என்பது பொருள். 'இல்லான்' என்றால் இல்லுக்குரியவன் என்று பொருளாகாது. இல்லாதவன் என்பதே பொருள். 'மனைவி' அல்லது 'மனைவியாள்' என்றால் மனைக்குரியவள் என்பது பொருள். 'மனைவன்'–'மனையன்'–என்றாலோ, மனைக் குரியவன் என்ற பொருளைத் தருதல் வழக்கில் இல்லை. எனவே, இல்லாள், மனைவி, எனும் மரபு வழக்குகளே, இல்லறத்திற்குரியவர்கள் மாதர்களே என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகிறதல்லவா? மாதர்களின் மாண்பே இல்லறத்தின் மாண்பு.

> "இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
> இல்லவள் மாணாக் கடை"

என்றார் வள்ளுவனாரும்.

உலக வாழ்வு என்பது பெருங்கடல். 'பிறவிப் பெருங்கடல்' என்றார் வள்ளுவர். துன்பங்களெனும் அடுக்கி வரும் பேரலைகள் அங்குண்டு, வறுமையெனும் கொடுங்காற்று வீசுதலுமுண்டு. பிணியெனும் நலிவுறுத்தும் சுறா மீன்களுமுள. பகையெனும் வன்பாறைகளும் ஆங்காங்கேயுள. இத்தனையும் தவிர்க்க முடியாதவை; ஆனால் தவிர்க்காது வாழ்க்கையையும் கடலையும் கடக்க முடியாது. பிறந்து விட்டால் வாழ்க்கைக் கடலில் போராடாதிருத்தலுமியலாது. என்ன செய்வது.?

இல்லறமெனும் இயல்புடைய மரக்கலத்தைப் பற்றுதலே அதற்குரிய வழி என்பது ஆன்றோர் கருத்து. இல்லறம் எனும் மரக்கல மாலுமி இல்லாள். அம்மரக்கலத்தைத் தக்க வழியிலே செலுத்த வேண்டியது அவள் பொறுப்பு. அன்பெனும்

சுக்கானைப் பிடித்துப் பண்பான பாதையிலே செலுத்த வேண்டும், சுக்கான் பிடிப்புப் பிழைபட்டால் மரக்கலம் செல்லும் வழி தவறி கொடுங்காற்றிலே அலைப்புறும், பேரலையிலே தள்ளாடும், வன்பாறையிலே எற்றுண்டு அழிந்து போம். அது போல இவ்வாழ்க்கையிலும் அன்புப் பிடிப்புத் தவறினல்-மனைவி அன்பின் வழி இல்லறத்தை நடத்தத் தவறினல், கணவன் மனநிலை தவறுவான். அறநிலை பிறழும். துன்பம் பல சூழும். எனவே அன்பு என்பது இல்லறத்தின் அடிப்படைப் பண்பு எனப் புலனுகின்றது. இல்லறமெனும் கலத்தை அன்பெனும் சுக்கானுல் பண்பாம் நெறியிலே செலுத்தி அறத் துறையிலே நிறுத்த, அதுவே வாழ்வின் பயனுக அமைகிறது.

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது' என்ருர் தெய்வப் புலவர்.

நடுக்கடலிலே மரக்கலம் செல்லுங்கால், சூழ்நிலை யால் நிலை தவறலாம். எனினும் மாலுமி நிலை தவறலாகாது. தக்க அறிவைக் கையாண்டு, கூற்றென வரும் கொடுங்காற்ருல் எற்றுருமலும் பிற இன்னல்களில் சென்று மோதாமலும், தக்கவாறு சுக்கானைத் திருப்பித் துறை சேர்த்தல் மாலுமியின் கடன். அதுபோன்ற சிறந்ததொரு பொறுப்பு இல்லற மாலுமியாம் மனையாளுக்குரியது. சூழ்நிலையாலோ பிறவாற்ருலோ, கணவன் நிலை தவறுவானுயினும்மனைவி அன்பு நிலையினின்றும் தவறலாகாது. கணவனை மாறுபடுத்தும் கொடுங்காற்று எதுவென உய்த்துணர்தல் வேண்டும்; அவன் மனநிலையை அலைப்புறுத்தும் அலைகள் யாவை என ஆய்தல் வேண்டும். அறிந்து அன்புச் சுக்கானை அழுத்திப் பிடித்தல் வேண்டும். அன்புச் சுக்கான் ஆக்கமுறும்போது-அறிவின் வழி-ஆக்கமுறும் போது-கணவன் இல்லறப் பண்பாம் நன்னெறியில் திரும்பாதிருக்க இயலுமோ?

ஏறத்தாழ ஆயிரத்து இருநூறு ஆண்டுகளுக்கு முன் பாண்டிய நாட்டை ஆண்டு வந்த மன்னன் கூன்பாண்டியன். அவன் 'நெடுமாறன்' எனப்பெரிய புராணத்துள் போற்றப்படுகின்ருன். சமண சமயம் பரந்து வந்த காலம் அது. சூழ்நிலை மன்னனையும் ஆட்கொண்டது. மன்னன் தன் குல மரபிற்குரிய சைவத்தை விட்டு சமணம் சார்ந்தான். அரசன் எவ்வழி அவ்வழி குடிகளும். மன்னன் வழியே மக்களும் சமணம் சாரலாயினர்; பதை பதைத்தனர் பலர். அரசன் மனமாற்றங் கண்டு மனம் நொந்தார் அவன் மாண்புறு மனைவியாம்

மங்கையர்க்கரசியார். எனினும் மன்னனோடு மாறுபட்டா ளில்லை. அன்புப் பிணைப்பினின்று சிறிதும் பிறழ்ந்தாளில்லை. அந்நிலையினின்றே கூர்த்தமதியால் ஆய்வு நிகழ்த்தினாள். மதுரைமா நகரில் வாழ்ந்து வந்த சமணத் துறவிகளின் கூட் டுறவே அரசரின் மனமாற்றத்திற்கான காரணம் என அறிந் தாள். அரசன் அறிந்து திருந்துவதற்குள்ள வழியை ஆயத் தலைப்பட்டாள்.

அக்காலையில் திருஞான சம்பந்தர் என்னும் சைவப் பெரியார் இன்னிசையால் நாளும் தமிழ் பரப்பிவந்தார். அன்பு நெறியைப் போதித்து வந்தார். அவரால் மன்னன் திருத்தப் பெறவேண்டும் எனக் கருத்துட்கொண்டார் மங்கையார். அம்மையார் வேண்டுகோளுக்கிணங்க சம்பந்தர் மதுரை வந்து சேர்ந்தார். மதுரை வந்து தங்கியிருந்த சம்பந்தருக்குச் சமணர் கொடுமைகள் பல யிழைத்தனர். மக்கள் செய்யும் பிழைக்கு மன்னன் பொறுப்பு. அதனால் சமணர் கொடுமையால் அரசர் சுரநோய் கொண்டார். இத்தருணத்தைத் தக்கவாறு பயன் படுத்திக்கொண்டாள் மங்கையர்க்கரசியார். சமணர் சம்பந்தர்கருச் செய்த கொடுமையே அரசனைச் சுரநோய்ப் பற்றக் காரணமாயிற்றென்றும், சம்பந்தர் சுரநோய் அகற்றத் தக்க அருளுடையாரென்றும் அமைவுடன் எடுத்தோதினார். எவ்வாறாயினும் சுரநோய் நீங்கினால் போதுமெனக் கருதிய மன்னவன் சம்பந்தரை வரவழைத்தான். அவரால் சுரநோய் நீங்கப்பெற்றான். மகிழ்ந்தான். சம்பந்தர் அருளுரையை ஏற்றான். சைவம் சார்ந்தான். மக்களும் மன்னன வழித் திரும்பினர். மங்கையர்க்கரசியார் மனமகிழ்ந்தார். என்னே! மங்கையர்க்கரசியாரின் அறிவின் ஆற்றல்! அன்பின் மாண்பு! அம்மங்கையார் மாண்பினை உள்ளூர உணர்ந்த சேக்கிழார் பெருமான் அம்மங்கையாரை,

‘மங்கையர்க்குத் தனியரசி, எங்கள் தெய்வம்
வளவர்திருக் குலக்கொழுந்து, வளைக்கைமானி
செங்கமலத் திருமடந்தை, கன்னி நாடாள்
தென்னர்குலப் பழிதீர்த்த தெய்வப்பாவை’’

எனப் போற்றுகின்றார்.

தெய்வப்பாவை எனும்போற்றுதலுக்குத் தமிழ் நாட்டு மங் கையர் ஒவ்வொருவரும இலக்காய்த் திகழவேண்டும். திகழ்ந் தால் இல்லறம் மாண்புறும், இல்லறம் மாண்புறவே நாடு நல்லறத்தில் திகழும். நாட்டை நலமுறச் செய்யும் அறங்காக் கும் மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்ய வேண்டுவது இயல்பு தானே.

மானுட யாக்கை

மா. ப. தியாகராசன் பி.ஏ.,

சைவ சமய பரமாசாரியர்கள் நால்வருள் ஒருவராகிய திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளியுள்ள பாடல்.

"உடம்பெனும் மனைய கத்துள் உள்ளமே தகளி யாக
மடம்படும் உணர்நெய் யட்டி உயிரெனும் திரிம யக்கி
இடம்படு ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில்
கடம்பமர் காளை தாதை கழலடி காண லாமே."

என்பதாகும். இந்த உடம்பு பூமியாகிய மனையில் கட்டிய வீடு என்கிறார். இது உயிர் குடியிருக்கும் வீடு என்பர்.

எல்லா ஜீவராசிகளின் வீட்டைவிட மானுட வீடு மிகச் சிறப்புடையதென்று பெரியோர் கூறுவர். "அரிது அரிது மானுடப் பிறவி பெடுத்தலரிது" என்பர். ஏன்? இது ஏனைய உடம்புகளைவிட ஒரு சக்தி அதிகமாகப் பெற்றுள்ளது. அதாவது பேசும் சக்தி, தம் கருத்தை வெளியிடப் பேசும் ஆற்றலுடையது. ஒரு மாடு தனக்கு உடம்பு நலமில்லாவிடின் வண்டியை இழுத்துச் செல்ல முடியாதெனத் தெரிவித்துக்கொள்ள முடியாது. மனிதன் உடல் நலமில்லையென்று தெரிவித்துக்கொண்டு விடுமுறை எடுத்துக் கொள்கிறான். மற்றும் சம்பவங்களைத் தொகுத்துப் பார்த்து இன்ன பல செய்கைகளினால் இநத விளைவு ஏற்பட்டது என்று காரண காரியங்களை கொண்டு யூகித்து நல்ல காரியங்கள் நிகழ நல்வினை செய்யவேண்டுமெ என்ற உண்மை மானுடப் பிறவியில் விளங்குகிறது. எனவே தொகுப்பறிவினால் நன்மை தீமைகளை உணரும் தன்மை மானுடப்பிறவிக்கே சிறந்ததொரு அமைப்பாகும். இப்படிப்பட்ட அருமையான மனிதப் பிறவியை மலக்கூடு, மலப்பாண்டம், ஊன் பொதிந்த பொதி, நாற்ற உடல், ஊத்தைச் சடலம், காற்றடைத்த பை என்றெல்லாம் வெறுத்துக் கூறுவதைக் காண்கிறோம். சுந்தரமூர்த்தி சுவாமிகள் "அழுக்குமெய்

கொடுன் திருவடி அடைந்தேன்'' என்று கூறுகிறார். பட்டினத்தடிகள் இதை ஒரு மாட்டுத் தொழுவம் என்று கூறுகிறார். உயிரெனும் பசு கட்டப்பட்ட மனை இவ்வுடலாகும். இது மலம் கோமயம், வைக்கோல் முதலியன நிரம்பிய தொழுவமாகும். சுத்தமின்றியிருப்பின் அது பசுவின் நிலையையும் உடம்பையும் பாதிக்குமன்றோ? அதைப்போல காமக் குரோத லோபங்களால் அசுத்தப்பட்ட உடல் உயிர் வாழ்வதற்குத் தகுதியற்றதாகும். அப்படிப்பட்ட உடலினால் உயிர் நல்ல வண்ணம் வாழ முடியாதெனக் கூறலாம். நல்ல வண்ணம் வாழ்தாலன்றி அது தன்னிடத்து மங்கிக்கிடக்கும் அறிவை வளர்க்க முடியாது. கன்றைக் கண்டால் பசு பால் சுரக்கும். அதுபோல் இறைவனைக் காணின் உயிரில் அறிவு சுரக்கும்' இயற்கையினியல்பு இன்மையை நிரப்புவது. அதாவது பசி எடுப்பின் உணவு கொண்டு வயிற்றை நிரப்பவேண்டுவது இயற்கை. தாகம் எடுத்தால் தண்ணீரருந்தி அதைத் தணிக்கிறோம். காற்றும் வெளிவருமளவுக்கு உள் செல்கிறது. கனலும், உடம்பில் உஷ்ணம் குறையுமானால் போர்வையினால் அதைச் சமத்துவப்படுத்திக் கொள்கிறோம். இறைவனின் இருப்பிடமாகிய ஆகாய தத்துவம் தன் ஒளியைக் காட்டிக் கண்ணொளியை மிளிரச் செய்கிறது. அதேபோல் "'அறிவாகிய'' இறைவன் உயிரிலுள்ள அறிவைத் தட்டி எழுப்புகிறான். அந்தகாரத்தில் அறியாமையிலுள்ள உயிருக்கு தனுகரண புவன போகங்களைத் தந்து அதை விளங்கவைக்கிறான். இதை உணர்த்துமாபோல திருநாவுக்கரசு சுவாமிகள் பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

> ''விறகிற்றீயினன் பாலிற்படு நெய்போல்
> மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்''

விறகில் அடங்கியுள்ள கனலைத் தீயினால் வெளிப்படுத்துவதுபோல, பாலில் மறைந்துள்ள நெய்தயிரினால் வெளிப்படுவதுபோல, கல்லைக் கல்லினுறைத்து அதன் ஒளியை வெளிப்படுத்துவதுபோல உயிரிலடங்கியுள்ள

அறிவை இறை அறிவால் உறைத்து வெளிப்படுத்த வேண்டும். மாணிக்கவாசக சுவாமிகள் "சென்று சென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து" ஒன்றும் என உயிரறிவு இறைவனைச் சார்ந்து சார்ந்து பசு அறிவு பதி அறிவாக ஒன்றிவிடுமெனக் கூறுகிறார். எனவே உயிரெனும் பசு கட்டப்பட்ட மனையில் இறைவனருள் வந்து தங்க உயிர் வசதி அளிப்பின் இம்மானிட உடல் ஓர் ஆலயமாகிவிடும். திருமூலர் "ஊனுடம்பாலயம் வாய் கோபுர வாசல்" என்கிறார். திருநாவுக்கரசரும்,

> "காயமே கோயிலாகக் கடிமனம் அடிமையாக
> வாய்மையே தூய்மையாக மனமணி இலிங்கமாக
> நேயமே நெய்யும்பாலா நிறையநீர் அமைய ஆட்டிப்
> பூசனை ஈசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே."

என்று கூறுகிறார். அப்படி இம்மானுட உடலை ஆலயமாக ஆக்கவேண்டுமெனின் திருநாவுக்கரசு சுவாமிகள் கூறுவது போன்று உள்ளமெனும் அகலை இம் மனையில் வைத்து அதில் உணர்வெனும் நெய்யை விட்டு உயிராகிய திரியைச் சிட்டம கட்டாமல் முறுக்கி அதில் தோய்த்து ஞானத் தீயால் எரிகொள இருந்து நோக்கில் அவ்வுயிர் இறை அறிவால் கடம்பமர் காளை தாதை கழலடி யிணையைக் காணும் பேறுபெறலாம். எல்லோருக்கும் உள்ளம் இருக்கிறது. அதை வெற்றுள்ளமாக, ஈரமில்லா உள்ளமாக, மூடப்பட்டதாக வைத்திருக்கின்றனர். உணர்ச்சியே இல்லாத உள்ளம் மனித உள்ளமாகாது. துன்பப்படுவோனைக் கண்டால் கனியாத உள்ளம் உள்ளமாகுமா? இறைவனிடத்து அன்பில்லா உள்ளம் உள்ளமாகுமா? உணர்வோடு கூடிய உள்ளம் வேண்டற்பாலது என்கிறார். உயிர் விழிப்புடனிருத்தலையே "திரிமயக்கி" என்கிறார். யாக்கை நிலையாமையை உணர்ந்து அதனால் பிணிப்புண்டு அனுபவிக்கும் துன்பங்களையும் எண்ணி அவற்றினின்றும் விடுபடும் உபாயத்தை நாடி அவ்வழி முயன்று அயர்வின்றி முயன்று நிற்றலே விழிப்புடனிருத்தலாகும். அப்படியிருந்தும் அறிவு முதிரவில்லையா

னல் இறைவனை அறிய முடியாதாகையால் ஞானத் தீயை எரிகொள உபாயம் குருமுகமாக நாடி யடையவேண்டும். அப் போது, சூரியன் தன் கிரணங்களினல் பொருள்களை விளக்கக் கண்ணொளியினல் அவற்றைக் காண்பதுபோல இறைவனின்னருள் அவனை விளக்கிக் காட்ட பசு அறிவால் அவனைக் காண முடியும். இதையே திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள்—

''ஊனி லுயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நல்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிடர்
ஆன கெடுப்பன அஞ்செ ழுத்துமே.

எனப்பாடி யருளியுள்ளனர். அருணகிரிநாதரும் கந்தரனுபூதி பாடலொன்றில் ஐம்புலன்களினல் காணமுடியா இறைவனை அறிவாலறிய வேண்டுமென்று உணர்த்துகிருர்.

''செவ்வா னுருவில் திகழ்வே லவனென்று
ஒவ்வா ததென உணர்வித் ததுதான்
அவ்வா றறிவா லறிகின் றதலால்
எவ்வா ருெருவர்க் கிசைவிப் பதுவே.'

என்ற பாடலைக் கந்தரனுபூதியில் காணலாம்.

ஒவ்வொருவரும் தம்மை யறியாமலே உழைத்தும், இவ்வுடலைப் பசி இன்றி வைத்தும் சுத்தமாக ஓய்வு கொடுக்க வேண்டிய வேளையில் ஓய்வுகொடுத்தும் அவ்வோய்வு பெற ஒரு வீடு அமைத்துக்கொண்டு நாள் முழுவதும் பாதுகாத்தும வருகின்றனர். எனினும் அதனல் அடையக்கூடிய வீடுபேறதை அடைய அதனைப் பயன்படுத்திக் கொள்வதில்லை. 'வாய்த்தது நந்தமக் கீதோர் பிறவி மதித்திடுமின்!'' என்று எச்சரிக்கை செய்கின்ருர் திருநாவுக்கரசு சுவாமிகள். அப்படி இம்மானுடயாக்கை உயிரறிவினை வளர்த்து பதி அறிவைப் பெற்று அவனைக் காணப் பயன்படுமாயின் அது

வேண்டத்தக்க பிறவியேயாகும் என்று பின்வரும் பாடலில் அவரே கூறியருளியுள்ளார்.

குனித்த புருவமுங் கொவ்வைச் செவ்வாயிற்
குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்
பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்த பொற்பாதமுங்
காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே
இந்த மாநிலத்தே.

அவையடக்கமும் ஆன்றோர் தமிழும்

பசு-பரல. நடராசன் பி,ஏ.,

சைவ சமய உணர்வு நாட்டிலே மிகுந்திருந்த இடைக் காலங்களில் செய்யுள் நடையில் சில அற்புதங்கள் நிகழ்ந் தன. காப்பியங்களில் காணமுடியாத சிற்சில பண்புகள் பிற்கால இலக்கியங்களில் புகுந்து சிறந்து விட்டன. இவை காலத்தால் ஏற்பட்ட வளர்ச்சியாகும். எடுத்துக்காட்டாக இங்குக் கடவுள் வணக்கத்தைப்பற்றிச் சிந்திப்போம். எட் டுத் தொகை நூல்களைத் தொகுத்த பாரதம் பாடிய பெருந் தேவனார் தொகை நூல்களின் தொடக்கத்தே 'எல்லா உயிர்க்கும் ஏமமாகிய' சிவபெருமானையும் முருகப் பெருமா னையும் தனித்தனியே வணங்கிச் செல்கிறார். திருவள்ளு வரோ முருகப் பெருமானையோ சிவபெருமானையோ சுட் டாது கடவுள் வாழ்த்து என்று பொதுவாகக் கூறிச் செல்கி றார். சிலப்பதிகாரம் செய்த இளங்கோவடிகளோ ஞாயி றுக்கும், திங்களுக்கும், மாமழைக்கும், பூம்புகார்க்கும் போற்றல் கூறித் தொடங்குகிறார். ஆக, இந்நிலையில் ஒருவித வளர்ச்சியிருக்கிறது. கடைசியாக, பெருங்காப்பியமாகிய

சீவக சிந்தாமணி, பெரியபுராணம் போன்றன தத்தம் கடவுளையே தொழுகிற மரபு இன்றுவரை நிலவுகிறது. அது போல, தோட்டிமையுடைய தொண்டர்களாகவும், அடியார்க்கு அடியார்களாகவும் வாழ்ந்த புலவர் சிரோன்மணிகள் தாம்படைக்கிற காப்பியங்களில் அவையடக்கம் என்ற ஒரு பகுதியை அங்கமாகச் சேர்த்தனர். அவ்வவையடக்கத்தில் வருகிற பாசுரங்கள் கற்பனைக் களஞ்சியமோ! அன்றி இன் சுவைத் தேறல் ஊற்றோ, தமிழுக்கே உரிய தனிச் சிறப்போ என்ன நினைக்கச் செய்கின்றன.

சிலம்பும் அவையடக்கமும்

பலப்பல சிறப்புடைய சிலப்பதிகாரத்திலே அவையடக்கம் உண்டு எனக் கூறுவதற்கில்லை. இளங்கோவடிகள் மேற்கொள்கிற நடை அற்புதமானதுதான்.

அரசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றுவதூஉம்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்தூட்டு மென்பதூஉம்
சூழ்வினைச் சிலம்பு கரரணமாக
நாட்டுதும் யாமோர் பாட்டுடைச் செய்யுள்

எனச் செப்பிச் செம்மாந்து செல்கிறார் ஆசிரியர். பிற்கால ஆசிரியர்கள் அவ்வாறு கூறாது அவை அடங்கி நின்றனர். தம்முடைய வாழ்வு சின்னாள் வாழ்வு, அவ்வாழ்வும் பல்பிணியான் நிறைந்தது. தாமோ சிற்றறிவுயிர் என எண்ணித் தாம் செய்கிற நூல்களில் தவறுளதேல் அறிஞர் உலகை மன்னித்தருளும்படி வேண்டுகின்றனர். அவர் தம் அறிவிற் குறையில்லை. ஆனால் சொல்லிலும் பண்பாடு காணும் நோக்குடையவர்கள் அவர்கள். யாதொரு கூற்றும் குற்றம் அற்றதாக இருப்பினும் உடல் மன அயர்வினால் தவறு நேர்ந்திடின் அதற்கு மன்னிப்புக் கேட்டுக் கொள்வதற்காகவே அவையடக்கத்தை நூலின் அங்கமாகப் பயன்படுத்திக்

கொண்டனர். அப்பாசுரங்கள் இலக்கியச் சிறப்பும் பண் பாட்டுச் சிறப்பும் உடையன.

சேக்கிழார் சுவாமிகள் புராணத்தில் உமாபதிசிவம் தலைசிறந்த இரண்டு பாடல்களைக் கூறுகின்றார். முதற்பாட லில் தன்னுடைய அறிவுச் சிறுமையையும் தமிழ் நூல் அள வினையும் குறிப்பிடுகிறார். இரண்டாம் பாடலில் தன்னு டைய தமிழ் எவ்வாறு ஏனைய தமிழோடு கருதப்பெறும் என்று குறிப்பிடுகிறார். இரண்டு பாடல்களும் ஒன்றை ஒன்று விஞ்சுகின்றன.

ஊர்க்கடலை இவன்எனவந் துதித்தநான் ஓங்குதமிழ்
நூற்கடலைக் கரைகண்டு நுவலநினைக்கு மதுதிருப்
பாற்கடலைச் சிற்றெறும்பு பருகநினைக்கு மதுபோலும்
நீர்க்கடல்சூழ் வையமெலாம் நிறுக்கநினைக்கு
மதுஒக்கும்.

"ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் கள் நிறைந்திருக்கின்றனர் இவ்வுலகில். யானோ அறிவினுற் சிறியவன். மலை போன்று திண்ணிய பெருமையுடைய அவர்தம் புலமைக்கெதிரே புழுதிபோன்றது என்னுடைய புலமை. தமிழ் கூறும் நல்லுலகில் ஏற்பட்ட நூல்களோ கடல் போன்று நிறைந்துள்ளன. எனவே அத்தனை நூல் களையும் அறிந்து என் சிற்றறிவு வெளிப்படச் சொல்லு தலாவது ஒரு சிறு எறும்பு பாற்கடலைக் குடித்து முடிக்க முயல்வது போலாகும். அல்லது என்னுடைய முயற்சி உலகை எடைபோட முயலும் அலகை போலாகும். எனினும்,

தேவுடனே கூடியசொல் செழுந்தமிழோர் தெரிந்துரைத்த
பாவுடனே கூடியஎன் பருப்பொருளும் விழுப்பொருளாம்
கோவுடனே கூடிவரும் குருட்டர்வும் ஊர்புகுதும்
பூவுடனே கூடியநார் புனிதர்முடிக் கணியாமால்,

கண்ணில்லாத கறவைப் பசு விடுநிலங்களில் படுபுல் மேயச் செல்லும்போதும், மேய்ந்து திரும்பும்போதும் மற்றைய கண்ணுள்ள பசுக்கூட்டத்தின் மையத்திலேயே சென்று கண்ணில்லாத குறையைத் தீர்த்துக்கொள்ளும். அதுபோல பூத்தொடுக்கும் நாரை இறைவனுக்குச் சாத்துவதில்லையே னும், பூக்களைத் தொடுத்து நிற்கிறதால் நாரும் இறைவ னுக்கு அணியாகின்றது. எனவே அற்பனாகிய என் பாக்கள் இறைவனைப் பற்றி அமையும்போது விழுப்பம்பெறு கிறது. பருப்பொருள் விழுப்பொருள் ஆகிறது" என்று ஆசிரியர் கூறுகிறார். இப் பாடல்களில்தான் எத்தனைக் கற் பனை; எத்தனை அடக்கம். உமாபதி சிவத்தின் உண்மை உணர்வை உள்ளுந்தோறும் நமக்கு நயத்தகு வியப்பு ஏற்படு கிறது அல்லவா? அத்தனை சிறந்த பெரும் புலவர், தான் ஒன் றும் அறியாதவன்' என்று கூறிக்கொள்ளத்தான் எத்தனை மகிழ்ச்சி அடைகிறார். இதுபோன்ற எண்ணிறந்த பாசுரங் களைத் தமிழில் இயன்ற சைவ நூல்களில் காணல் சாலும்.

மற்றொரு சுவைசான்ற பத்தி பழுகிய பரஞ்சோதி முனிவரின் அவையடக்கப் பாடலை இங்குத் துய்ப்போம். பெருங்காப்பியமாகப் படைக்கப்பட்ட திருவிளையாடற் புரா ணத்தின் தகுதியும், பரஞ்சோதி முனிவரின் சகலகலாவன் மையும் இயற்றமிழ்ச் செய்யுணடை இனிமையும் பிறவும் ஒருவர் கூறாமலே விளங்கும். அவர்தம் பாடலில்தான் எத்தனை அச்சம்; எத்தனை வரலாற்றுச் சுருக்கம்; எத்தனை அடக்கம்.

"இறைவனே "கொங்குதேர் வாழ்க்கை" என்னும் பாடலைத் தருமிக்காக யாத்துத் தந்தும், அப்பாடலிற் பொருட் குற்றம் இருப்பதாக நக்கீரர் கூறித் தருமிக்குப் பொற்கிழி கிடைக்காமற் செய்து விடுகிறார். எனவே மது ரைச் சொக்கேசன் பாடிய பாடலிலே பொருட் குற்றம் கண்ட கழகப் புலவர்கள் இருக்கின்ற மதுரையப் பதியிலே மதுரையைப்பற்றிய நூலை நான் சொன்னால் அதிலே குற்றங் கள் வெளிப்படையாகவே தெரியலாம். அவைகளில் குற்றம் நீக்கிக் குணமெடுத்துக்கொள்ள வேண்டும். தண்ணீரும்

பாலும் கலந்த கலவையிலே தூயதீம்பாலை மட்டும் உண்ணு கிற அன்னம் போன்று அறிஞர்கள் மதுரைச் சொக்கேச னுடைய கதையில் குற்றம் காணார் என்கிறார். தென்தமிழ் நாட்டுத் தெவிட்டாத தெள்ளமுதெனத் திருவிளையாடற் புராணத்தை அருளிச் செய்த பரஞ்சோதி முனிவர் பாடு வதிலும் அழகு இருக்கத்தானே செய்கிறது.

நாயகன் கவிக்கும் குற்றம் நாட்டிய கழகமாந்தர்
மேய அத்தலத்திஞேர்க்குஎன் வெள்ளறிவுரை யிற்குற்றம்
ஆயுமாறு அரிதன்றேனும் நீர்பிரித்தன்னம் உண்ணும்
தூயதிம்பால்போல் கொள்க சுந்தரன் சரிதம்தன்னை

என்பது அப்பாடல். இவையன பல புராணத்தில் சுடர்விட் டொளிரும் மணியென மிளிர்வதைக் காணலாம்.

வேறுவிதத்தில் அமைந்த மற்றொரு பாடலையும் இங் குச் சுட்டலாம். சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவா சாரிய சுவாமிகள் ஓர் உலகியல் உண்மை நிகழ்ச்சியையே உவமையாக்கி அவையடக்கம் நுவலுகின்றார். காதன்மை யுடைய ஒரு தலைவனும் தலைவியும் அன்போடு தாம் பெற்ற குழந்தையோடு கொஞ்சிக் குலவுகின்றார்கள். அக்குழந்தை யும் குமுத வாயில் அமிர்தமென ஊறுகிற எச்சில் கம்பி கம்பியாக உடலும் உடையும் நனையத் தெளிவில்லாத சொற் களைப் பேசித் தீர்க்கிறது. அது பேசுவதென்ன? என்று ஒருவாற்றாலும் அறியக்கூடாதாயினும் குழந்தை பேசுவதே நமக்குப் பெற லரும் பரிசில்; வாராத செல்வம் என்றெல்லாம் கூறிப் போற்றுகின்றனர் தாய் தந்தையர்.

அதுபோல நெறி அறிந்த புலவர்கள் நான் பாடலெழுத முயலுதலைப் பாராட்டி ஊக்குவிப்பார்கள். என்மீது அரு ளுள்ளம் கொண்டு என்தன் பாசுரங்களில் குற்றம் பாராட் டார் எனப் பலபடக் கூறுகிறார். சித்திக்குமேல் நூலில்லை என்று போற்றப்பெறுகிற சிவஞான சித்தியாரைச் செய்த

அருள் நந்தி சிவமும் இப்படிக் கூறுகிறார் என்றால், அவை யடக்கமே சைவப் பண்பாடு எனச் சொல்லத் தோன்றுகிற தல்லவா? அப்பாடலைக் காண்போம்:

நீடுபுக முலகதனில் மைந்தர் மாதர்
நேயமொடு தாம்பயந்த புதல்வர் வாயிற்
கூடுமொழு மழலையொடு குழறியொன்றும்
குறிப்பரி தாயிடினும் குலவிப் போற்றி
மாடுநமக்கிது வென்றுகொண்டு வாழ்வர்
அதுபோல மன்னுதமிழ்ப் புலவர்என்தன்
பாடுகவிக் குற்றங்கள் காணார் இந்நூல்
பாராட்டா நிற்பர் அருட்பரிசினாலே.

இத்தகைய சாத்திரங்களும் புராணங்களும் நிறைந் திருக்கின்ற சைவ வுலகிற்கு எத்தனையோ பெருமைகள் உண்டென்றாலும் அவையடக்கம் போன்ற பாடல்கள் தலை யாய சிறப்பைப் பெறுகின்றன. *Creative Output of great poets* என்று இவைகள் போற்றப் பெறுகின்றன. ஆகவே அவையடக்கப் பாக்களைப் பண்பாட்டுச் சிறப்பும் பாவளமும் ஒருங்கே சேர்ந்த ஒப்பற்ற சொல்லோவியங்கள் எனக் கூறலாம்.

திருச்சிற்றம்பலம்

தேனன்ன தண்ணீர்

(மு. அருணாசலம்)

வாழ்க்கையில் பக்குவ மென்பது முக்கியமான ஒரு பண்பு. எல்லாத்துறைகளிலும் இது பொருந்த வேண்டு வது. பொருந்தினால்தான் அனைவருடைய வாழ்க்கையிலும் பெறுகிற அனுபவங்களெல்லாம் ஆன்மாவை அறிவுடைய தாகச் செய்து மேல்நிலைக்கு நடத்திச் செல்லும். பக்குவம் இல்லாவிட்டால் புலன்களால் பெறுகின்ற நுகர்ச்சி எதுவும் முழுப்பயனையும் தருவதில்லை.

பலர் ஒரு சொற்பொழிவைக் கேட்கச் செல்கின்றார்கள். பேச்சாளர் தாம் கொண்ட கருத்தைத் தாம் அறிந்த வரையில், வேறு பொருள் கொள்ள இயலாத வகையில் தான், தெளிவுபடுத்திச் சொல்லுகிறார். ஆனால் கேட்பவர்களோ, தங்கள் தங்கள் நிலைக்கு ஏற்ப வெவ்வேறான கருத்துக்களைப் பெறுகிறார்கள். சிலர் முழுமையும் மாறான கருத்துக்களையும் கூட கொள்ளுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம், கேட்பவருடைய முந்திய அனுபவங்களின் பிரதி பலிப்பு. சாமானிய உலக விவகார அனுபவநிலை இப்படியென்றால் ஆன்ம அனுபவத்தில் அல்லது திருவருள் அனுபவத்தில் ஏற்படும் நிலையையும், அந்த நிலைகளின் மாறுபாடுகளையும் விவரித்துச் சொல்ல முடியாது.

மேகம் மழை பொழிகின்றது. ஒரே நிலப்பரப்பில் ஒரே காலத்தில் பெய்கின்ற சிறுமழை, பலருக்குப் பலவிதமான பலனைக் கொடுக்கின்றது. பொன்னான மழை என்று போற்றுபவரும் உண்டு. இது பத்து நாள் முன்னதாகப் பெய்திருக்கக் கூடாதா? என்று கூறுபவரும் இருக்கிறார்கள். 'இப்பொழுது பெய்ய வேண்டாமே' என்று வேண்டிக் கொள்பவரும் உண்டு.

இறைவனுடைய அருளின் நிலைமையும் இவற்றை ஒத்ததே. இறைவனுடைய அருளானது தன்னினும் மேலான பொருள் எதுவும் இல்லாதபடி அமுதம் போல அனைவருக்கும் ஒன்றே அளிப்பது என்பது உண்மைதான். ஆனால், அருள் இன்பத்தையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் இல்லாதவாறு உயிர் தவிக்கின்ற நிலையை மாணிக்கவாசகர் நமக்குக் காட்டுகிறார். இந்த நிலைக்குக் காரணம் ஊழ் என்றும், முன்னை வினைத்தொடர்பு என்றும் பலவாறு நாம் காரணம் சொல்ல முடியும். ஆனாலும் இத்தகைய நிலை இருப்பது உண்மை தான். சத்தான சுவை நிறைந்த உணவு பச்சிளம் குழந்தைக்கு ஏற்காது, நோயாளிக்கும் ஏற்காது என்பதை நாம் அறிவோம். நோயாளி அள்ளி விழுங்கி விடலாம்; ஆனால் அது துன்பத்தில் தான் முடிகிறது.

மாணிக்கவாசகர் சொல்லுகின்றார். "ஆண்டவனே! உன்னுடைய அருளாகிய சுவை மிகுந்த அமுதத்தை நீ

கருணையோடு வழங்கினாய். ஆனால் தீவினை யுடையவனாகிய யான், அதை அளவாக அனுபவிக்கக் கருதாது, ஒரே வாயாக மடுத்து உண்பது போல, வாரி விழுங்க முற்பட்டேன். எனக்கு நல்லூழ் இல்லை. என்னால் அதைப் பயன்படுத்திக் கொள்ள இயலவில்லை; தொண்டையில் அடைத்துக்கொண்டது. அடைப்பை நீக்குவதற்காக வெறுந்தண்ணீரை அருந்தினால்தான் பிழைக்க முடியும். ஆகவே தண்ணீர் இப்போது கொடுத்து என்னைக் காப்பாற்றுவாயாக'' என்று முறையிடுகின்றார்.

சுவை மிகுந்த உணவை உண்டு துன்புற்றவர்களுக்கு, உலக வழக்கில் மருந்தைக் கொடுப்பது வழக்கம். தொண்டையில் விக்கினவர்களுக்கு வெறுந்தண்ணீரைக் கொடுத்தாலே போதுமானது மாணிக்கவாசகர் இப்படி தண்ணீர் கேட்கின்றார், துன்புற்ற நிலையில் அவருக்கு வெறுந்தண்ணீரே தேன் போல சுவை தருவதாகிறது.

மேலும் அவர் சொல்லுகின்றார், ''என்னை அடிமை யாக உடைய தலைவனே! மிகவும் நான் துயருறுகின்றேன். உன்னையே சரண் புகுகின்றேன். என்னைக் காத்தருள வேண்டும்'' என்று இறைஞ்சுகின்றார்.

வழங்குகின் றாய்க்குஉன் அருள்ஆர்
அமுதத்தை வாரிக் கொண்டு
விழுங்குகின் றேன்விக்கி னேன்வினை-
யேன்என் விதியின் மையால்
தழங்கரும் தேன்அன்ன தண்ணீர்
பருகத் தந்து உய்யக்கொள்ளாய்
அழுங்குகின் றேன்உடை யாய்அடி
யேன்உன் அடைக்கலமே.

மாணிக்கவாசகர் கூறும் அனுபவம் வாழ்க்கையில் எல்லோருக்கும் வருவது ஒன்றாகும். அவரே, பேரருள் வழியை நன்குணர்ந்து கொள்ள முடியவில்லை. அழுங்கு கின்றேன் என்று முறையிடுகின்றார். சாமானிய மக்கள் நிலை இங்கே சொல்வதற்கில்லை. அவரோ அருள் வசமாக நிற்பவர். அருளைப் பூரணமாகப் பெற்று அனுபவித்தவர்.

இப்போது அருள் அனுபவம் விளங்காமல் திகைக்கின்றார். தேறும் வகை நீ திகைப்பு நீ என்று மற்றோரிடத்தில் பாடுகின்றார். என்னால் அறியாப் பதம் தந்தாய்; யான் அஃது அறியாதே கெட்டேன் என்றும் சொல்லுகிறார். பக்குவம் நிறைந்த அவருடைய தன்மையே இப்படி இருக்கும் பொழுது, பக்குவம் சிறிதும் இல்லாத நம் போன்றவரது தன்மையை என்னவென்று சொல்ல முடியும்?

மகாத்மா காந்திக்கு மிகவும் உவப்பான ஓர் ஆங்கிலப் பாடலில் வருகிற ஒரு வரி இங்கு நினைவு கூரத்தக்கது, கார்டினல் ஜான் ஹென்றி நியூமன் என்பவர் இதைச் சென்ற நூற்றாண்டில் பாடினார். இது, "அருள் ஒளியே, என்னை வழி நடத்திச் செல்வாயாக" என்ற மகுடமுடையது. பலர் இதைத் தமிழில் மொழிபெயர்த்திருக்கின்றார்கள். அதில் நாம் கருதும் பகுதி பின்வரும் வரி; "ஆண்டவனே! எனக்கு நீ வழிகாட்டி நடத்திச் செல்வாயாக. நெடுந்தூரத்திலுள்ளவற்றை நான் காண வேண்டுமென்ற ஆசையோடு கேட்கவில்லை. ஓரடி மட்டும் எடுத்து வைக்க நீ வழிகாட்டினால் போதும்."

மாணிக்கவாசகரது பாடல், ஆன்மா ஆண்டவன் திருவடியில் பூரணமாய்த் தன்னை ஒப்புக்கொடுத்தும் கூட, மீண்டும் மீண்டும் ஆணவமாகிய அழுக்கு வந்து மூடி, பக்குவம் குறைகின்ற தன்மையை ஒரு கோணத்திலிருந்து காட்டுகின்றது. உண்மையாகவே பலருக்கும் இத்தகைய சோர்வும் திகைப்பும் வருதல் கூடும். இதிலிருந்து மீண்டும் கரையேறுவதற்கான வழி அடைக்கலம் புகுவது ஒன்று தான். இப்பாடலானது அவருடைய இதயத்தை அப்படியே நம் முன் திறந்து வைத்து இதயமே நம்மோடு பேசும்படி செய்கின்றது

தமிழருடைய ஆன்ம வாழ்வில் இத்தகைய பாடல்கள் பெருஞ்சிறப்புடைய அருட் செல்வங்கள். சிவஞான சித்தியார் கூறுகின்றபடி மிக்க புண்ணியம் செய்து தான் இப்பாடல்களை நாவாலே சொல்லுகின்ற நிலைமைக்கு நாம் வரமுடியும். நாவினாலே பாடலைச் சொல்லி இறைவனை வழுத்த, இறைவனை நெருங்கி வருகின்ற நிலை கைகூடும். சைவ மக்கள் இவை கூறுகின்ற சொற்பொருள் விளங்கும்படி இசையோடு இவற்றைப் பாடுவித்துச் சிறப்பான பயன் பெற வேண்டும்.

அரசனின் அருள் மொழி.

(நெல்லை R. S. இராமலிங்கம்)

'தொட்டனைத்தூறும் மணற்கேணி' போல படிக்கப் படிக்க இன்பவூற்றை அளிப்பது பெரிய புராணம். சைவ மக்கள் சாந்துணையும் போற்றிப் புகழும் சிறப்பு வாய்ந்த திருத்தொண்டர் புராணத்தை அருளிய சேக்கிழார், அந்நூலில் இறைவன் திருவடியைப் போற்றும் அடியவர்கள் பெருமையையும், அருமறைகளுக்கும் அப்பாலாய் உள்ள இறைவன் அடியவரை ஆட்கொள்ளும் பொருட்டு எளிதில் வந்து அருளுஞ் சிறப்பையும் விரிவாக விளக்கியுள்ளார்.

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு சேதி நாட்டை ஆண்டு வந்த அரசர் பரம்பரையில் வந்த மெய்ப்பொருள் நாயனர்,

> தேசிகர் தம்மைச் சிவனேசர் தம்மையும்
> ஈசனென வேயுளத்துள் எண்

என்றபடி சிவனடியாரைச் சிவன் எனவே சிந்தை செய்து வாழ்ந்து வந்தார். வேத நெறியில் விதித்தவாறு வாய்மையின மேன்மை பூண்டு, மாற்றலர் முனைகள் மாற்றி வெற்றியே கண்ட வீரர் எனத் திகழ்ந்து, நீதியோங்கும் நீர்மையில் அரசு செலுத்தி, அடியவர் விரும்பும் பொருள்களை அளித்து, அவர் திருவேடமே மெய்ப்பொருள் எனத் தொழுது வந்த பெருமையால் "மெய்ப்பொருள் நாயனர்" என்று அவர் மேதினியில் விளங்கப் பெற்றார்.

இறைவனிடத்தும் இறைவன் அடியாரிடத்தும் இடையறா அன்பு கொண்ட இம்மன்னரோடு முத்தநாதன் என்பவன் பகைமை பூண்டு போர் தொடுத்துப் பலமுறையும் தோற்றுப்போய் பொன்னணியோடு ஆனை குதிரை மற்றும் படைகளையும் இழந்து பரிபவப்பட்டு நின்றான்! "இனிப் போரினல் இவரை வெல்வது இயலாது; வஞ்சகத்தினல் வெல்லவேண்டும்" என்று கருதியவனய், மெய்ப்பொருள் வேந்தன் சீலமறிந்து வெண்ணீறு சாத்தும் அப்பெருவேடங் கொண்டு அற்றத்தில் வெல்வானகிச் செப்பரும் நிலைமை எண்ணித் திருக்கோவலூர் சேர்ந்தான். முழுநீறு

பூசிய முனிவர்போல, மெய்யெலாம் நீறு பூசினன். மறை வில் இருந்து சடையை வளர்த்த மகான்போலத் தன் குடு மியைத் தலையில் தூக்கிக் கட்டினன்; தவவேடங் கொண்ட சாமியார்போல் தோற்றங்கொண்டு கையிலே புத்தகக்கவுளி ஏந்தினன்; அதில் ஆயுதத்தை மறைத்து வைத்தானும்! மை பொதிந்த விளக்குப்போல மனத்தில் வஞ்சக எண்ண மாகிய கறுப்பை வைத்துப் பொய்த் தவவேடங் கொண்டு புகுந்தனன் முத்தநாதன் என்று சேக்கிழார் வருணிப்பது சிந்தித்து வியக்கத்தக்க சிறப்பு வாய்ந்தது.

விளக்கு பிரகாசமாய் எரியும்போது அதிலிருந்து புகை மேலே கிளம்புகிறது; இருண்ட புகையை உள்ளடக்கிய விளக்குப் போல உடம்பெல்லாம் வெண்ணீற்றின் ஒளிவீச உள்ளே கறுப்பு வைத்துச் சென்றான் என்று சேக்கிழார் சித்தரிப்பது அவரது செய்யுள் நலத்திற்குச் சிறந்த எடுத் துக்காட்டாக விளங்குகிறது.

இவ்விதம் தன்னை யாரும் அறியாவண்ணம் மாறு வேடம் பூண்டு இரவு வேளையில் மன்னன் மாளிகையை யடைந்தான். அரசனுக்கு அரிய உபதேசஞ் சொல்வதற் குச் செல்வதாக அங்குள்ள காவலாளரிடம் தெரிவிக்கவும், அவர்களும் சிவனடியாரைத் தடுத்து நிறுத்தினல் அரசன் சினங்கொள்வான் என்று அஞ்சி வழிவிட்டார்கள். அரண் மனைக்குள் தடையின்றிச் சென்று அரசன் துயில்கொளும் மாடத்திற்கு அருகே நெருங்கிவிட்டான்; அங்கே அறிவும திறமையும் வாய்ந்த தத்தன் தனியாகக் காவல் செய்து நின்றான்.

வெண்ணீற்றின் ஒளி விளங்க வேடம் புனைந்து வந்த மகானைக் கண்டதும் திகைத்துச் சோர்ந்த தத்தன் "சமயம் அறிந்து நீவிர் அருள் செயவேண்டும்; அரசன் நித்திரை செய்கிறார்" என்று கைதொழுதான்.

"இடைதெரிந்து அருள வேண்டும்; துயில் கொளும் இறைவன்" என்ற வாசகம் கேட்டதும், "யான் அவர்க்கு உறுதி கூறச் செல்கிறேன்; நின்றிடு நீயும்" என்று தடுத்து உள்ளே சென்றான்; அங்கே மாசற்ற சோதியாய் விளங்கிய

மன்னவன் மஞ்சத்தில் அயர்ந்து உறங்க, அவன் அருகே தேவியார் அடிவருடிக்கொண்டிருக்கும் அற்புதக் காட்சியைக் கண்ணால் கண்டான். அழகுஞ் சீலமும் அமையப் பெற்ற அந்நங்கை பின் தூங்கி முன் எழும் பேதை இனத்தைச் சேர்ந்தவள்! அவ்வரிய கற்புக்காசியைக் கண்டும் அவனது மனம் மாறுதல் அடையவில்லை!

எதிர்பாராத நிலையில் எதிரே ஒருவர் வருவதைக் கண்டதும், தேவியார் கடிதெனை எழுந்து காவலனை எழுப்ப, 'அண்டர் நாயகனர் தொண்டராம் என' அரசனும் தொழுத கையுடன் எழுந்து அவரை வரவேற்றான்.

மங்கலம் பெருக மற்றென்வாழ்வு வந்தணைந்ததென்ன
இங்கெழுந் தருளப்பெற்றது என்கொலோ?

என்று மன்னவன் வினவ "உங்கள் நாயகனர் உரைத்த ஆகமநூல் மண்மேல் எங்கும் இல்லாதது ஒன்று கொடு வந்தேன்; அரசனே! நீயும் நானும் வேறிடத்திருக்க வேண்டும்" என்று நீறு பூசியவன் நிமிர்ந்து கூறினான். அதன்படி அரசனும் தன்தேவியை அந்தப்புரத்திற்குச் செல்லப் பணித்துவிட்டு, ஓர் ஆசனமிட்டு அதிலே வந்தவரை அமரச்செய்து தான் தரையிலே இருந்து கொண்டு "இனி அருளிச்செய்யும்" என்று, வருவதை யறியாத வேந்தன் தலைகுனிந்து வணங்கினன்! பாவம்!

அவ்விதம் வணங்கும்போது தான்வைத்திருந்த புத்தகக் கவளிகையை மடியில்வைத்து அவிழ்ப்பவன் போல் அவிழ்த்து அதில் மறைத்து வைத்திருந்த ஆயுதத்தை எடுத்து அவன் நினைத்துவந்த கோரச் செயலைச் செய்து விட்டான் அரும்பாவி! உடனே இரத்தம் பெருகியது! மயங்கினர் மன்னவர்!

அடியவருக்குக் கொடியவன் இழைத்த தீங்கை தம் வாக்கினல் சொல்வதற்கும் மனமில்லாத சேக்கிழார்

பத்திரம் வாங்கித் தான் முன் நினைந்த அப்பரிசே செய்ய
மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் எனத்தொழுது வென்றார்!

என்று அறிவிக்கிறார். சொல்வதற்கும் அஞ்சுகிறார் சேக்கிழார்! (பத்திரம்=ஆயுதம்) "ஆயுதத்தால் தாக்குண்டு

அயர்ந்து சோர்ந்து விழும்போது" மெய்த்தவவேடமே மெய்ப்பொருள் என்று தொழும் மெய்யுணர்வு ஏற்பட்ட நிலையைக்கண்டு, வேடமே மெய்ப்பொருள் என்னுங் கொள்கையில் வெற்றிகண்டார் என்பது தோன்ற இங்கு தொழுதுவென்றார் என்றுகூறிய நயம் கண்டின்புறலாம்.

இவ்விதம் மன்னன் தாக்கப்பட்டு மயங்கி விழுவதைத் தத்தன் கவனித்தான். ஓடோடியும் வந்து உடைவாளை உருவினான். அவ்வேளையில் நிறைந்த செங்குருதிசோர வீழ்கின்ற அரசர் தம் நீண்ட கையால் "தத்தா! நமர்!" என்று தடுத்து வீழ்ந்தார்.

அரசன் தடுப்பதை அறிந்த தத்தன் மனம் தத்தளித்தது. "யாது நான் செய்கேன்?" என்று பணிந்து நிற்கவும் "எம்பிரான் அடியார் போக இடையூறு நேராவண்ணங் காத்துச் செல்வாயாக" என்று கட்டளையிட்டார். இதற்குள், "அடியவன் போல வந்து அரசனைக் கொன்றான்" என்னும் செய்தி எங்கும் பரவியது. காவலாளர்கள் கொதித்து எழுந்தார்கள்,

"இத்தவன் போகப் பெற்றது இறைவனது ஆணை" என்று அனைவரையும் தடுத்து அவருக்கு இடையூறு நேரா வண்ணம் பாதுகாத்து அவரை அனுப்பிவிட்டுச் சோர்ந்து விழுந்த மன்னனைக்காண தத்தன் விரைந்து வந்தான். அங்கே மன்னனது நிலை என்ன? அழகாக வருணிக்கிறார் அருட்கவிஞர்!

............வஞ்சனை வேடத்தான் மேற்
செற்றவர் தம்மை நீக்கித் தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறம் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவிதாங்கும்
கொற்றவன்".............

தம்மைத்தாக்கிய அவன் தீதிலா நெறியில் சுகமே சென்றான் என்னும் நல்ல சொற்களைக் கேட்க வேண்டிச் சோர்கின்ற ஆவியைத் தாங்கியிருந்தாராம் அரசர்! உடலை விட்டுப் போகும் உயிரைச் சொற்றிறம் கேட்கும் வரை போகாமல் நிறுத்தித் தாங்கினார். அத்தகைய வெற்றிப்பாடுடைய சதுரர் என்னும் சிறப்புத் தோன்ற "கொற்றவன்" என்று சேக்கிழார் இங்கு போற்றுகின்றார்.

அங்கிலேயில் "வேடம்புனைந்து வந்தவரை இடையூறின்றி விட்டனன்" என்னும் மொழிகளைக் கேட்டார்; அவரது மனங் குளிர்ந்தது! இன்று எனக்கு அய்யன் செய்தது யார் செயவல்லார்? என்று தத்தனை வாழ்த்தினர். ஆவிதளர்ந்தது. அடியவர் வேடத்துடன் வந்து அரசனைக் கொன்றான் என்பதை நினைத்து மக்களின் மனம் அடியவர்பால் மாறுபடுமே என்று அஞ்சினர்! உடனே, அங்கு கூடியிருந்த அரச சபையினரையும், அவரது பிரிவை நினைத்துத் துயருறும் மனைவி மக்கள் முதலானவர்களையும் பார்த்து உறுதியானதொரு உபதேசத்தை ஆவிபிரியும் நிலையில் அரசன் கூறினன்.

அரசியலாயத் தார்க்கும் அழிவுறுங் காதலார்க்கும்
விரவிய செய்கை தன்னை விளம்புவார் விதியினாலே
பரவிய திருநீற்றன்பு பாதுகாத் துய்ப்பீர் என்று
புரவலர் மன்றுளாடும் பூங்கழல் சிந்தை செய்தார்.

இச் செய்யுளின் சிறந்த பொருள் நலத்தை இங்கு சிந்தித்து உணர வேண்டும். இவ்வரிய செய்யுளின் விழுமிய கருத்தை விளக்குவதற்கே இக் கட்டுரை எழுத நேர்ந்தது.

வஞ்சக வேடத்தில் வந்து அரசனைத் தாக்கியதால் அங்குள்ள மக்களுக்கு அடியவர்பால் வெறுப்பு உண்டாகலாம என்று அரசன் அஞ்சினன். சான்றோர்கள் செய்த தொண்டின் சிறப்பினால் உலகெங்கும் பரவிய சைவ நெறிக்குப் பாதுகாப்பு குறைந்து விடும் என்றும் மனத்தில் எண்ணியவராய்த் தமக்குப்பின் அரசபாரத்தை ஏற்றுக் கொளவிருக்கும் மந்திரி முதலானோர்க்கும் அவரது பிரிவை நினைந்து சிந்தை நொந்து அழிவுறுஞ் சுற்றத்தார்க்கும் அங்கு நடந்த சம்பவத்தை விளக்கி "விதியினால் இவ்வித முடிவு ஏற்பட்டுவிட்டது! வேதத்தில் விதித்துள்ள விதிப்படி சிவனடியாரைச் சிவன் எனவே சிந்தை செய்யவேண்டும். பாரெங்கும் பரவிய சைவநெறி மேலும் தழைத்து ஓங்க வேண்டும்; இனிமேல் அதற்குப் பாதுகாப்பு இன்றியமையாதது என்று மனத்தில் நினைத்ததை எடுத்துக் கூறும் முறையில்,

"பாவிய திருநீற்றன்பு பாதுகாத்து உய்ப்பீர்" என்று அரசன் உபதேசஞ் செய்வது அனைவர் உள்ளத்தையும் உருக்குவதாகும். திருநீற்றன்பு பாதுகாத்தலாவது:— திருநீற்றின் பெருமையை அறிந்து தாம் அணிந்து கொள்வதும், திருநீறு அணிந்தாரைப் போற்றி வாழ்வதும் ஆகிய நன்னெறியைக் கடைப்பிடித்து ஒழுகுவதாகும். இவ்வரிய உபதேச மொழிகளைக் கூறியதோடு அவரது கடமை உலகில் முடிந்து விட்டதாக நினைந்து, தில்லைமன்றுளாடும் இறைவன் திருப்பாதங்களை மனத்திலே தியானித்தார். இவ்விதம் நன்னெறி காக்க நல்ல உபதேசஞ் சொல்லி முடிக்கவும், அவரது ஆவி பிரியும் நேரம் வர, அவ்வேளையில் அம்பலத்தே ஆடுங் கருணை வெள்ளத்தை அவர் சிந்தை செய்தார் என்று செய்யுளுக்குத் தனி மகுடஞ் சாத்தி, செய்யுளை முடிக்கும் சிறப்பு, அளவிடலரிய பெருமை வாய்ந்ததன்றோ?

இவ்விதம் இறுதி வேண்டுகோள் விடுத்து இறைவன் திருவடியைச் சிந்தை செய்தார் என்பதை இங்கு கூர்ந்து கவனிக்க வேண்டும். அறியாச் சிறு பருவமுதலே அம்பலவாணரை அனுதினமும் வழிபட்டுத் தியானஞ் செய்து வந்ததின் பலனாக, ஆவி பிரியும் தருவாயில் தில்லை மன்றுளாடும் பூங்கழலைத் தியானஞ் செய்யும் நிலை அரசர் பெருமானுக்கு ஏற்பட்டது. இவ்விதம் உயிர்பிரியும்போது இறைவனது உணர்வு அனைவருக்கும் உண்டாகவேண்டும் என்பவற்காகவே அவன் திருநாமத்தை இடையறாது சொல்லிப் பழகி வரவேண்டும் என்று சான்றோர்கள் கூறுவார்கள்.

ஆகவே அடியவரைப் பேணி வாழ்ந்த அரசர் பெருமான் உயிர்பிரியும் நிலையில் தில்லைமன்றுள் ஆடும் திருவடியைத் தியானிக்க, இறைவனும் அவ்விதமே ஆடுங் கருணை மூர்த்தியாகக் காட்சியளித்து அருள் செய்தான் என்று வரலாற்றில் விளக்கப்படுகிறது.

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

என்றும் மெய்ம்மைக்கு மெய்யுருவாய் விளங்கிய மெய்ப்பொருள் நாயனாரின் அரிய செயலை நினைந்து சேக்கிழார் அவருக்கு வணக்கஞ் செலுத்துகிறார்.

இன்னுயிர் செகுக்கக்கண்டும் எம்பிரான் அன்பரென்றே
நன்னெறி காத்த சேதி நாதனார் பெருமை தன்னில்
என்னுரை செய்தேனாக.

உள்ளன்பில்லாதவன் உயிரைப் பிரித்தான். அன்பில்லாத வேடத்துடன் வந்து அன்பற்ற செயலைச் செய்த அவனையும் அன்பன் என்றே கருதி அவரை இடையூறின்றிச் செல்ல விடுத்து, திருநீற்றில் அன்புவைத்து அரசு செலுத்துவீர் என்று அருள்மொழி வழங்கிய மன்னவனை நன்னெறி காத்த சேதிநாதனார் என்று சேக்கிழார் போற்றுவது சாலச் சிறப்புடையதன்றோ? "வேடமே சிந்தை செய்த வேந்தனின் பெருமை அளவிலாதது; என்னாலியன்ற அளவு உரை செய்தேன்'' என்று சேக்கிழார் இரங்கும் நிலையும் இங்கு கவனிக்கத்தக்கது. அடியார் பெருமையைச் சொல்லுதல் தொண்டர் சீர்பரவுவார்க்கும் அரிது என்றால், அவர்தம் பெருமையை யாரே அளவிட்டுக் கூறவல்லார்? இவ்வரசனின் உறுதி வேண்டுகோளை இக்காலத்தவரும் சிந்தையிற் கொண்டு சிறப்படைய வேண்டும்.

மதிப்புரை

"ஸ்ரீதேவி கருமாரி அம்மன் விஜயம்'' என்னும் மாத இதழ் உடுக்கை 1 ஒலி 2 ஆவது இதழும் உடுக்கை 1 ஒலி 3 ஆவது இதழும் வரப்பெற்றோம். இவ்விதழ்களில் தேவியின் பெருமை பற்றிக் கூறும் பல கட்டுரைகள் சிறப்பிடம் பெற்றுள்ளன. மேலும் சைவ சித்தாந்தம், வைணவம் முதலிய சமயங்களைக் குறித்த கட்டுரைகளுடன் சித்த வைத்தியம், இராசி பலன் முதலியவற்றையும் காலநிலையை யொட்டி வெளியிட்டுள்ளார்கள். தேவியின் அருள் கிடைக்கத்தக்க கட்டுரைகளுடன் வைத்தியத்தையும் இராசி பலனையும் வெளியிடல் தகுமா என்பது சிந்தனைக்குரியது. உலகம் பலவிதமாதலின் இதுபற்றி உரியோர் ஆய்ந்து கொள்வார்களாக. பத்திநெறியைப் பரப்ப வெளிவந்துள்ள இந்த இதழை மனமார வரவேற்கிறோம். அதன் தொண்டு சிறக்க தாயின் அருள் நிறைந்து விளங்க அவளிணையடிகளையே வணங்கி வேண்டுகின்றோம்.

(அம்பை)

பிறசெய்திகள்

காஞ்சிபுரம் மெய்கண்டார் கழகச் சார்பில் 31–8–69, 7–9–69, 21–9–69, 28–9–69 ஆம் நாள்களில் காஞ்சிச் சிவதல வார வழிபாடும் 26-9-69, 28–9–69 அன்று முறையே சிவப்பிரகாச சுவாமிகள் திருநாளும் மறைஞான சம்பந்த சிவாசாரிய சுவாமிகள் திருநாளும் சிறப்புறக் கொண்டாடப்பெற்றன.

புரசைத் திருநெறிக்கழக 103ஆம் திங்கள் வழிபாடு 21–9–69 அன்று அயன்புரம் ஸ்ரீ பரசுராமேசுவரர் திருக்கோயிலில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது.

சேலம் செவ்வாய்ப்பேட்டை தேவாங்கபுரம் ஸ்ரீ இராமலிங்க சௌடேஸ்வரி அம்மன் கோயிலில் திரு. கொ. அ. அப்பாய் செட்டியார் அவர்கள் ஆற்றிய பெரிய புராண விரிவுரை நிறைவு விழா 22-9-69 அன்று நிகழ்ந்தது.

27–9–69 முதல் 5-10-69 முடிய திருவள்ளுவர் இரண்டாயிரம், காந்தியடிகள் நூற்றாண்டு, வள்ளலார் திருநாள் காரணமாக முப்பெரு விழா எ. வி. எம். இராஜேஸ்வரி கல்யாண மண்டபத்தில் சிறப்புற நிகழ்ந்தது. பல்துறைப் பேரறிஞர்களும் பங்கு பெற்றுச் சிறந்த சொற்பொழிவுகளாற்றினர்.

திரிசிரபுரச் சைவசித்தாந்த சபையில் 5—10—1969ல் ஈரோடு திரு. அ. ஞானசம்பந்த முதலியார் அவர்களால் "ஆவணங்காட்டி யாட் கொண்டது" என்ற தலைப்பில் சைவ சித்தாந்த தத்துவங்களுடன் சுந்தர மூர்த்திநாயனர் வரலாற்றைப் பற்றி ஓர் அரிய விரிவுரை நிகழ்த்தப் பெற்றது. செயலாளர் திரு. சிவப்பிரகாசம் நன்றி கூறினர்.

நம் சமாஜப் போஷகர் திரு. மு ஸ்ரீநிவாச செட்டியார் அவர்கள் அறுபதாண்டு நிறைவு விழா 12–9–69 அன்று பழநியில் மிகச் சிறப்புற நிகழ்ந்தது. அப்பெரியார் சைவமும் தமிழும் தழைக்க நீடிய தொண்டுகள் இன்னும் பல ஆற்றி நல்வாழ்வு பெற்றிலங்க ஆவினன்குடி அமர் அப்பன் அருள்புரிய அன்னோன் அடியிணைகளையே வேண்டி வணங்கி வாழ்த்துகின்றோம்.

வருந்துகிறோம்.

நம் சமாஜத் துணைத்தலைவர் திரு. K. E. அருணாசல முதலியார், M.A.,B. Com, அவர்களின் அருமைத் தந்தையார் காட்டூர் திரு. ஏகாம்பர முதலியார் அவர்கள் தம் 84-ஆம் வயதில் 22-9-69 அன்று காலமானார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவர் மறைவு கருதி நம் சமாஜத்தின் ஆழ்ந்த வருத்தத்தை அப்பெரியார் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்வதுடன் வையத்து வாழ்வாங்கு வாழ்ந்து காட்டிப் பேறும் புகழும் பிற எல்லாச் சிறப்புக்களும் இனிதெய்திய அப்பெரியாரின் ஆன்மா எல்லாம்வல்ல ஒப்பற்ற பெருமானின் திருவடிக்கீழ் இன்புற்றிருக்க அருள் செய்ய அவனருளையே வேண்டி வழுத்துகின்றோம்.

நம் சமாஜப் பேரன்பரும் அடக்கமே உருவாய்த் திகழ்ந்தவருமாகிய திரு. C. அமிர்தகணேச முதலியார் அவர்கள் 9-9-69 அன்று காலமானது தெரிந்து வருந்துகின்றோம். அவர் சமாஜத்திற்கு ஒல்லும்வகையான் உளமார சமயப் பணிகளை அவ்வப்போது புரிந்துவந்த உத்தமராவர். அவர் குடும்பத்தினருக்கு நம் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எல்லாம் வல்ல ஒப்பற்ற பரங்கருணைத்தடங்கடல் அப்பெரியாரின் ஆன்மா இன்பமார்ந்திருக்க அருள் புரியவேண்டி இறைஞ்சுகின்றோம்.

சிறந்த தமிழ்ப் பேரறிஞரும் கல்வெட்டு ஆராய்ச்சியில் வல்லவரும் சைவ சித்தாந்த சாத்திர அறிஞருமான வித்துவான் சுந்தரேச வாண்டையார் அவர்கள் காலமானது கேட்டு வருந்துகின்றோம். அவர் குடும்பத்தினருக்கு சமாஜத்தின் ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். மறைந்த அப்பெரியாரின் ஆன்மா இறைவன் குஞ்சித சரணத்தின்கீழ் இன்பமார்ந்திருக்க அவனருளையே வேண்டி வழுத்துகின்றோம்.

Printed at the Sengunthamithran Press, 33, Armenian Street, Madras by V. Sambandan, Edited by M. Arunachalam, M.A., and Published by S. Satchidanandam Pillai, B.A., L.T., for the Saiva Siddhanta Maha Samajam, 12, East Mada St., Mylapore, Madras-4.